Registered as Newspaper

# சுடர் ஒளி

THE SUDAR OLI

සුඩර් ඔළි

30.10.2020 வெள்ளிக்கிழமை

**புதினம் தெரியுமோ?**

யாழ்ப்பாணக் கச்சேரியின்ர பெரிய தலையை இப்ப புலிகேசி எண்டு கூப்பிடுறவங்கள். அது ஏன் எண்டு பட்சி இண்டைக்குச் சொல்லும் என்று நேற்று சொல்லியிருந்தது. அந்தக் காரணத்தை அறியிறதில புலிகேசியும் வலு ஆர்வமாய் இருக்கிறாராம் என்றது லேட்டஸ் தகவல். நகைச்சுவை மன்னன் வைகைப்புயல் வடிவேலுவின் இரட்டை வேட நடிப்பில் வெளிவந்த படம் இம்சை அரசன் 23ஆம் புலிகேசி. அந்தப் படத்தைப் பார்க்காதவர்கள் இருக்கமாட்டார்கள். அதில் புலிகேசி என்று உக்கிரபுத்திரன் என்ற இரட்டை

2

# கொரோனா பரவலை கட்டுப்படுத்த பல்வேறு கட்டுப்பாடுகள் விதிப்பு


### யாழ்ப்பாண மாவட்டச் செயலக கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 30

யாழ்ப்பாண மாவட்ட கொரோனா ஒழிப்புச் செயலணியின் கூட்டத்தில் பல்வேறு முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன.

2

- வீட்டிலேயே திருமண நிகழ்வு
- திறந்த சந்தைகளுக்கு பூட்டு
- ஆலய வழிபாடுகள் நிறுத்தம்
- இறுதிச் சடங்குகளுக்கு மட்டுப்பாடு
- போட்டிகள், பொதுநிகழ்வுகள் ஒத்திவைப்பு



## பி.சி.ஆர். பரிசோதனைகளை வேகமாக முன்னெடுப்பதற்கு புதிய இயந்திரம் கொள்வனவு

*துணைவேந்தர் உறுதியளிப்பு*

*யாழ்ப்பாணம், ஒக். 30*

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் கடந்த 2 மாதங்களாக நிறுத்தப்பட்டிருந்த பி.சி.ஆர். பரிசோதனைகள் அடுத்த வாரம் முதல் மீண்டும் ஆரம்பிக்கப்படவுள்ளன. பி.சி.ஆர். பரிசோதனைக்குரிய இரசாயனங்கள் சுகாதார அமைச்சால் அனுப்பி வைக்கப்பட்டதும் ஆரம்பமாகும் என்று கூறப்பட்டுள்ளது. வடக்கில் கொரோனாத் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலை யிலும், பி.சி.ஆர். மாதிரிகள் அதிகளவில்*

2



## கரவெட்டி வாசிக்குத் தொற்று 750 வழித்தடச் சேவைகள் இடைநிறுத்தம்

*யாழ்ப்பாணம், ஒக். 30*

*பருத்தித்துறை யாழ்ப்பாணம் '750' வழித்தடச் சேவையில் ஈடுபடும் அனைத்து தனியார் பேருந்துகளும் சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் இடைநிறுத்தப்பட்டுள்ளன. கரவெட்டி இராஜகிராமத்தைச் சேர்ந்த பலர் தனியார் பேருந்துகளில் சாரதிகள், நடத்துனர்களாகப் பணியாற்றும் நிலையில் இந்த*

2

## இறுதித் தாய் இருக்கும்வரை போராட்டம் முன்னெடுப்போம்!

*காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்று அறைகூவல்*

*வவுனியா, ஒக். 30*

*காணாமல் ஆக்கப்பட்ட எம் பிள்ளைகளின் இறுதித் தாய் இறக்கும் வரையில் போராட்டத்தை முன்னெடுப்போம் என்று வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளது சங்கத் தலைவி கோக ராசா கனகரஞ்சினி தெரிவித்தார். கிளி நொச்சியில் இன்று இடம்*

2




## நவம்பர் 9ஆம் திகதி பாடசாலை ஆரம்பம்?

*கொழும்பு, ஒக். 30*

*எதிர்வரும் நவம்பர் மாதம் 9ஆம் திகதி பாடசாலைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து பரிசீலனை மேற்கொள்வதற்காக சுகாதாரப் பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன. பாடசாலைகளை மீள ஆரம்பிப்பது தொடர்பான சுகாதார அணுகுமுறைகள் குறித்த எழுத்து மூல பரிந்துரை*

2A

## முடக்கத்தை மீறினர் இராஜகிராமத்தவர்கள்

*யாழ்ப்பாணம், ஒக். 30*

*கரவெட்டி இராஜகிராமம் பகுதி தனிமைப்படுத்தப்பட்டு இறுக்கமாகக் கண்காணிக்கப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்ற போதிலும் அந்தப் பகுதி மக்களின் நடமாட்டம் பருத்தித்*

2

## கம்பஹா உட்பட 68 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு நீடிப்பு

- *49 பிரிவுகளுக்கே திங்களன்று தளர்வு*
- *அடங்கமறுத்த 1,260 பேர் கைது*

*கொழும்பு, ஒக். 30*

*நாட்டில் தற்போது 117 பொலிஸ் பிரிவுகளில் தனி மைப் படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுலில் உள்ளது. திங்கட்கிழமை காலை 5 மணிவரை ஊரடங்கு உத்தரவு தொட ரும் என பொலிஸார் அறிவித்துள்ளனர்.*

2A

## வவுனியாவில் 24 பேருக்கு கொரோனா

வவுனியா, ஒக். 30

வவுனியா பம்பைமடு தனிமைப் படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டவர்களில் 24 பேருக் குக் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. வவு னியா பம்பை

2A

சுட்டெரிக்கும் உண்மைகளை சுமந்து வரும் மாலை இதழ்

# கொரோனா பரவலை...

அவற்றில் சில முடிவுகளை உடனடியாக நடைமுறைப்படுத்துவது என்றும் சில முடிவுகள் நாளை மறுதினம் முதலாம் திகதியிலிருந்து நடைமுறைப்படுத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தில் இதில் யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் தலைமையில் இந்தக் கூட்டம் இன்று காலை இடம்பெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதனும் கலந்து கொண்டார்.

மேலதிக மாவட்டச் செயலர் ம.பிரதீபன், வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன், வடமாகாண உளநல சேவை பணிப்பாளர் கேசவன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ்ப்பாண மாவட்ட கட்டளைத் தளபதி, பொலிஸ் அதிகாரிகள், பிரதேச செயலர்கள் எனப் பல தரப்பினரும் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகளை யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க.மகேசன் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

- ஆலயங்களில் குருமார்கள் தவிர்ந்த ஏனையோர் வழிபாடுகளில் பங்கேற்கத் தடை.
- அன்னதானம் வழங்கல் உள்ளிட்ட ஏனைய ஆலய செயற்பாடுகளுக்கும் தடை.
- வர்த்தக நிலையங்களில் சுகாதார நடைமுறைகளை இறுக்கமாகப் பின்பற்றி செயற்பாட்டை முன்னெடுக்க முடியும்.
- திருமண நிகழ்வுகள் வீடுகளில் மாத்திரம் நடத்த முடியும். 50 பேர் மாத்திரமே பங்கு கொள்ள முடியும். திருமண மண்டபங்களில் நடத்த முடியாது.
- இறுதிச் சடங்குகள் மூன்று நாள்களுக்குள் முடிக்கப்படவேண்டும். ஆகக் கூடியது 50 பேர் மாத்திரமே கலந்துகொள்ள முடியும்.
- இரத்த உரித்துடையோர் தவிர ஏனையோர் வெளிமாவட்டங்களிலிருந்து நிகழ்வுகளில் கலந்துகொள்வது தடைசெய்யப்பட்டுள்ளது.
- பொதுப்போக்குவரத்துக்களில் ஆசன எண்ணிக்கைக்கு அமைவாகவே பயணிகளை ஏற்றமுடியும்.
- நடைபாதை வியாபாரங்களுக்கு தற்காலிகமாக தடை விதிக்கப்பட்டுள்ளது. மரக்கறி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருள்கள் மாத்திரம் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி விற்பனை செய்ய முடியும்.
- அனைத்து வகையான விளையாட்டு நிகழ்வுகளும் மறுஅறிவித்தல் வரை நிறுத்தப் பட்டுள்ளன.
- பொதுமக்கள் ஒன்றுகூடக்கூடிய நிகழ்வுகள், கூட்டங்கள் மறு அறிவித்தல் வரை முழுமையாகத் தடை செய்யப்பட்டுள்ளது.
- மறு அறிவித்தல் வரை தனியார் கல்வி நிலையங்கள் மூடப்படவேண்டும்.
- தரம் 1 இற்கான பாடசாலை அனுமதிக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. அதனை சுகாதார நடைமுறைக்கு அமைவாக, பெற்றோர் ஒன்றுகூடாதவாறு முன்னெடுக்க வேண்டும்.
- உணவகங்களிலிருந்து உணவுகளைச் சாப்பிடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. வீடுகளுக்கு எடுத்துச் செல்ல முடியும்.
- வெளிமாவட்டங்களிலிருந்து வருவோர் தொடர்பான விவரங்களை கிராம அலுவலர்கள் அறிந்திருக்கவேண்டும். வெளிமாவட்டங்களிலிருந்து வருகை தருவோர் தொடர்பில் கிராம அலுவலருக்கு மக்கள் தெரியப்படுத்தவேண்டும்.
- தொழிற்சாலைகளில் தொழிலாளர்களை தங்க வைத்து தொழில் நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும்.
- முடக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த அரச அலுவலர்களுக்கு, பிரதேச செயலர்கள் மற்றும் மாவட்டச் செயலர் இணைந்து பொருத்தமான மாற்று வழியை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். (உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலரின் சுற்றறிக்கைக்கு அமைவாக)
- குருநகர் மற்றும் பாசையூர் பகுதிகளில் உள்ள மீன் பதனிடல் நிலையங்கள் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளன. ஓர் நிறுவனம் மாத்திரமே மீன்களைக் கொண்டு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. ஏனைய நிறுவனங்கள் கொண்டு செல்ல முடியும்.

இந்தத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தி ஒருங்கிணைப்பதற்காக யாழ்ப்பாண மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் வாரத்தின் 7 நாள்களும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக திறக்கப்படவுள்ளன. இதற்குரிய ஒருங்கிணைப்பு அலுவலகத்தின் தொலைபேசி இலக்கம் 021 222 5000 என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ,5,111)

## புதினம் தெரியுமோ?

**வேடங்களில் வடிவேலு நடித்திருப்பார். புலிகேசியாக நடித்த வடிவேலு மாமன் நாசரின் சொற்படி ஆட்சி நடத்தியிருப்பார். அவரது ஆட்சியின் சீத்துவக்கேடு, ஜாதிச் சண்டை மைதானம் உருவாக்குவதிலிருந்து, மதுபான விற்பனையை ஊக்குவிப்பது வரையில் விரிந்திருக்கும். சுயபுத்தியுடன் செயற்படுபவர் உக்கிரபுத்தி ரன் பாத்திரம். அவரது ஆட்சிக் காலம் மக்கள் நலன்சார்ந்து இருந்தது. இப்போது யாழ்ப்பாணக்கச்சேரியின் பெரிய தலையை புலிகேசி எண்டு சொல்வதன் காரணம் புரிந்திருக்கும். சொல் புத்திக்காரன் அவர். படத்தில் நாசர் சொற்படி புலிகேசி ஆட்சி நடத்தியிருப்பார். இங்கே அமுல்பேபி சொற்படி இந்தப் புலிகேசி ஆட்சி நடத்துகின்றார். இத்தோடு மற்றொரு தகவலும் கிடைத்திருக்கிறது. புலிகேசியும் அவரது பரிவாரங்களும் யாழ்ப்பாண ஹொட்டலில் நேற்று பெரும் பார்ட்டி நடத்தினார்களாம். அங்கே 'தண்ணியும்' பரிமாறப்பட்டுள்ளதாம். இன்று கொரோனா கட்டுப்பாட்டு கூட்டம் நடத்தி மக்களுக்கு பெரும் கட்டுப்பாடு விதித்த புலிகேசி, தான் மட்டும் நேற்று மாஸ்க்கும் போடாமல் சமூக இடைவெளியும் இல்லாமல் பார்ட்டி மட்டும் நடத்தலாம். நல்லா இருக்கு உங்க நியாயம்?**

-பட்சி

# 750...

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கரவெட்டி இராஜ கிராமத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கோரோனா வைரஸ் தொற்று உள்ளமை நேற்றுமுன்தினம் கண்டறியப்பட்டது.

பேலியகொட மீன் சந்தைக்குச் சென்று வந்த நிலையில் அவர் கிராமத்தில் நடமாடியுள்ளார். இந்த நிலையில் ராஜ கிராமத்தில் 60 குடும்பங்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளன. தொற்றாளருடன் நேரடித் தொடர்பிலிருந்த யாராவது தனியார் பேருந்து சேவையில் கடமையாற்றினால் பயணிகளுக்குத் தொற்று ஏற்படலாம்.

அதனால் தொற்றாளருடன் நேரடித் தொடர்புடையோரைக் கண்டறியும் வகையில் பருத்தித்துறை யாழ்ப்பாணம் 750 வழித்தட சேவையில் ஈடுபடும் அனைத்து தனியார் பேருந்துகளும் சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தலின் அடிப்படையில் இடைநிறுத்தப்பட்டுள்ளன. (ம-20)

# வேகமாக முன்னெடுப்பதற்கு...

பெறப்பட்டுவரும் நிலையிலும், யாழ். போதனா மருத்துவமனையில் மாத்திரம் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவதால் முடிவுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டிருந்தது. இதனைத் தவிர்க்கும் வகையில் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொண்டு, முடிவுகளை விரைந்து வெளியிடுவதற்கான ஏற்பாடுகள் பற்றி ஆராய்வதற்கான கூட்டம் யாழ். பல்கலைக் கழகத்தில் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் இன்று வெள்ளிக் கிழமை காலை இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் வட மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ.கேதீஸ்வரன், மருத்துவர் குமாரவேல், யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி, யாழ். பல்கலை கழக மருத்துவ பீடாதிபதி மருத்துவ நிபுணர் எஸ். ரவிராஜ், சமுதாய மருத்துத் துறைத் தலைவரும், பல்கலைக் கழக கொவிட் 19 செயலணியின் இணைப்பாளருமான மருத்துவர் எஸ்.சுரேந்திரகுமாரன் மற்றும் நுண்ணுயிரியல், நோயியல் துறை விரிவுரையாளர்களும் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மருத்துவபீடத்தில் மீண்டும் பி.சி.ஆர் பரிசோதனைகளை அடுத்த வாரம் முதல் ஆரம்பிப்பதற்கு அந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பி.சி.ஆர் பரிசோதனைகளுக்குத் தேவையான மாதிரிகளை மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் ஊடாகப் பெற்றுக் கொள்வது எனவும், ஆய்வு நடவடிக்கைகளுக்கான நுண்ணுயிரியல் சிறப்பு ஆலோசனைகளை வழங்குவதற்கும், தேவையான உயரியல் காப்பு முறைகளைக் கண்காணித்து, அறிவுறுத்தல் வழங்குவதற்கு யாழ். போதனா மருத்துவமனையின் ஒட்டுண்ணியியல் நிபுணர் மருத்துவக் கலாநிதி திருமதி ரஜந்தி ராமச்சந்திரன் செயற்படுவார் என்றும், உயிரியல் மற்றும் ஆய்வுகூட கழிவுகளைப் பாதுகாப்பாக அகற்றும் பணியை யாழ். போதனா வைத்தியசாலை மேற்கொள்ளும் என்றும் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.


மருத்துவபீடத்தின் வழக்கமான பணிகளுக்குப் பாதிப்பேதும் ஏற்படாத வகையில் சர்வதேச நுண்ணுயிரியல் ஆய்வுத் தர நியமங்களுக்கமைய பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றன. மருத்துவபீடத்தில் இருந்து கடந்த முறை இந்தப் பரிசோதனைகளை மேற்கொண்ட மருத்துவர்களான அ.முருகானந்தன், மு.கலாமதி மற்றும் பேராசிரியர் செ.கண்ணதாசன் ஆகியோர் இந்தப் பரிசோதனைகளில் ஈடுபடவுள்ளனர். இவர்களுடன் பணியாற்றுவதற்கென நுண்ணுயிரியல் ஆய்வு கூடவியலாளர்களைப் பணிக்கமர்த்துவதற்கு யாழ். பல்கலைக்கழகம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் தற்போதுள்ள பி.சி.ஆர் பரிசோதனை இயந்திரத்தின் மூலம் நாள் ஒன்றுக்கு 60 மாதிரிகளே சோதனை செய்ய முடியும். இதனை 180 ஆக அதிகரிப்பதற்காக, ரூபா 50 லட்சம் பெறுமதியான புதிய பி.சி.ஆர் பரிசோதனை இயந்திரத்தை வாங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் எனத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா இந்தக் கூட்டத்தில் உறுதியளித்துள்ளார். (ஒ,5)

# முடக்கத்தை...

என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. பேலியகொட மீன்சந்தைக்குச் சென்றுவந்த கரவெட்டி இராஜகிராமத்தைச் சேர்ந்த நபருக்குக் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ள நிலையில், அந்தக் கிராமத்தைச் சேர்ந்தவர்கள் தனிமைப்படுத்தப்பட்டு கண்காணிக்கப்படுகின்றனர். இராஜ கிராமத்தில் இறுக்கமான சுகாதாரப் பாதுகாப்பு நடைமுறைகள் பின்பற்றப்படுகின்றன என்று தெரிவிக்கப்பட்டது. எனினும், அந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் பலரும் பருத்தித்துறை நகர்ப்பகுதிகள் உள்ளிட்ட பல இடங்களில் நேற்று நடமாடியதைக் காணக்கூடியதாக இருந்தது. இதேவேளை கரவெட்டிப் பகுதியில் இருந்து வெளியேறி சாவகச்சேரிக்குச் சென்ற பெண்ணால் நேற்று அந்தப் பகுதியில் பரபரப்பு ஏற்பட்டது. பேலியகொட மீன்சந்தைக்குச் சென்றுவந்த கரவெட்டி இராஜ கிராமத்தைச் சேர்ந்த சாரதியொவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதையடுத்து கரவெட்டி இராஜகிராமம் முடக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில் கரவெட்டியில் இருந்து நேற்று இரவு ஒரு பெண் சாவகச்சேரி கோயிற்குடியிருப்புக்கு சென்றுள்ளார். இதையடுத்து மக்கள் பதற்றமடைந்தனர். அந்தப் பகுதி பொதுச்சுகாதாரப் பரிசோதகருக்கு உடனடியாக அறிவிக்கப்பட்டது. இதையடுத்து குறித்த பெண் தனிமைப்படுத்தப்பட்ட பகுதியில் இருந்து வரவில்லை என்று தெரியவந்ததை அடுத்து அந்தப் பகுதியில் இயல்புநிலை திரும்பியது. (ம-9)

# கடற்பெருக்குத் தொடர்பில் அச்சமடையத்தேவையில்லை

*பேராசிரியர் சூசைஆனந்தன்*




யாழ்ப்பாணம், ஒக். 30
சந்திரன் புவியை நீள்வட்டப் பாதையில் சுற்றிவரும் போது சில காலங்களில் புவிக்கு அண்மையாகவும் சில காலங்களில் தொலைவாகவும் அமையும். தற்போது புவிக்கு அண்மையாக சந்திரன் இருப்பதால், பௌர்ணமி தினத்துக்கு இரண்டு நாள்கள் முன்னரும், இரண்டு நாள்கள் பின்னரும் கடல் நீர் தாழ்வான பகுதிகளுக்குள் ஊடறுத்துச் செல்லும். இது தொடர்பில் மக்கள் அச்சமடையத் தேவையில்லை. இவ்வாறு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேராசிரியர் சூசை ஆனந்தன் தெரிவித்தார்.

பூநகரி பிரதேசத்தில் கடந்த மூன்று நாள்களில் மூன்று கிராமங்களுக்குள் கடல் நீர் உட்புகுந்துள்ளது. அத்துடன் யாழ்ப்பாணத்தின் கல்லுண்டாய் மற்றும் தீவுப் பகுதிகளில் கடல் நீர் உட்புகுந்துள்ளது. இது தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
சாதாரணமாக கரையோரங்களில் ஒரே நாளில் இரு கடற்பெருக்குகளும், இரு தாழ்வுகளும் ஏற்படுவது வழமை. சூரியன், சந்திரன், புவிக்கு இடையேயான ஈர்ப்பு விசையே இதற்குக் காரணம். சந்திரன் புவிக்கு அண்மையில் இருப்பதால் சூரியனை விட அதிக ஈர்ப்பு சக்தி கொண்டதாக அமையும். சாதாரண நாள்களில் இடம்பெறும் வற்றுபெருக்கை விட பௌர்ணமி, அமாவாசை நாள்களில் இடம்பெறும் வற்றுப்பெருக்கு அதிகமாகவே இருக்கும். சூரியன், சந்திரன், புவி ஆகிய மூன்றும் இந்தத் தினங்களில் பெரும்பாலும் ஒரே நேர்கோட்டில் அமைவதால் இந்த நிலைமை ஏற்படுகின்றது. அமாவாசை, பௌர்ணமி நாள்களில் ஏற்படும் வற்றுப் பெருக்கு மிகவை வற்றுப்பெருக்கு என்று கூறுவார்கள்.

> பெரிஜி மிகவை வற்றுப்பெருக்கு
> முழுமதி / பௌர்ணமி தினம்
> இருள்மதி / அமாவாசை

சந்திரன் புவியை நீள்வட்டப் பாதையில் சுற்றிவரும் போது சில காலங்களில் புவிக்கு அண்மையாகவும் சில காலங்களில் தொலைவாகவும் அமையும். அண்மித்து அமைவதை 'பெரிஜி' நிலை எனவும், சேய்மையில் அமைவதை 'அபாஜி' நிலை என்றும் அழைப்பர்.

இப்போது சந்திரன் 'பெரிஜி' நிலையில் இருப்பதால் பௌர்ணமி தினக் காலப் பகுதியில் வழமைக்கு மாறாக உயர்வான பெருக்கு ஏற்படும். அத்துடன் காற்றின் வேகம், அமுக்கவேறுபாடுகள் கடல்நீரை தாழ்வான பகுதிக்குள் ஊடறுத்துச் செல்வதற்கு வழிவகுக்கும்.

இப்போது பூநகரி, கல்லுண்டாய், தீவுப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள நீர் உட்புகுதல் நிகழ்வு 'பெரிஜி' நிலையில் அமைந்த பெருக்கு ஆகும். இது எல்லாக்காலங்களிலும் ஏற்படாது. இதனால் அச்சுறுத்தல் இல்லை என்பதுடன் மக்கள் அச்சமடையத் தேவையில்லை, என்றார். (ஒ,5)

## இறுதித் தாய் இருக்கும்வரை...

பெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளைத் தேடும் போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது:
எங்களுக்கான நீதி எப்போது கிடைக்கும், அதனை யார் பெற்றுத் தருவார்கள் என்ற ஏக்கத்தில் நாங்கள் வீதிகளில் காத்திருக்கின்றோம். எமது இந்தப் போராட்டம் தீர்வு கிடைக்கும்வரை தொடரும் என உலக நாடுகள் மாத்திதரமல்ல சர்வதேசத்தில் வாழும் உறவுகளிற்கும் தெரியும். சர்வதேச நாடுகளில் வாழ்கின்றவர்கள் எங்களுக்காக குரல் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையோடும், எங்களுக்கான நீதியை சர்வதேசம் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையோடும் நாங்கள் இந்தப் போராட்டத்தை தொடர்ந்து கொண்டிருக்கின்றோம்.
சென்ற ஒருசில நாட்களுக்கு முன் அமெரிக்காவின் இராஜாங்கச் செயலரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை நாங்கள் மேற்கொண்டிருந்தபோதும் இந்தக் கொடிய நோயின் காரணமாக அவரை சந்திக்க முடியாமல் போயுள்ளது. இந்த நிலையில் எமது நீதிக்கான கோரிக்கையை அவரிடம் கையளித்துள்ளோம். எமக்கான நீதியைப் பெற்றுத்தருவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கின்றது. கிளிநொச்சியில் மாத்திரமல்ல பல பகுதிகளிலும் மாதாந்தம் 30ஆம் திகதி இந்தப் போராட்டம் நடைபெற்று வருகின்றது. காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காகப் போராடிக்கொண்டிருக்கும் இறுதித்தாய் இருக்கும் வரையில் இந்தப் போராட்டம் தொடரும். கொரோனாப் பெருந்தொற்று, இராணுவம், இராணுவ புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல்கள் என எதுவந்தாலும் போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை - என்றார்.
(ம-110,26,ரி3)

## நவம்பர் 9ஆம் திகதி...

களை சமர்ப்பிக்குமாறு கல்வி அமைச்சு சுகாதார அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இதற்கிடையில் இணையவழிக் கற்பித்தல் தொடர்பான மேற்பார்வை ஒன்றை செய்தவதற்கு கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. அனைத்து மாணவர்களுக்கும் இணைய வசதி இன்மை காரணமாக இந்த மேற்பார்வையை மேற்கொள்ள தீர்மானித்துள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ம-இ)

## வவுனியாவில்...

மடு தனிமைப்படுத்தல் முகாமில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த நபர்களின் பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் நேற்றிரவு கிடைத்துள்ளன. இதன் போதே மேலும் 24 பேருக்குக் கொரோனாத் தொற்றிருப்பது உறுதிப்படுத்தப்

## தொற்றாளர்கள் அதிகரிப்பு ஆபத்துநிலை நீங்கவில்லை

*சுகாதார அமைச்சு எச்சரிக்கை*

கொழும்பு, ஒக். 30
'கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தே செல்கின்றது. எனவே, அடுத்துவரும் நாட்கள் அவதானம்மிக்க காலப்பகுதியாகும். கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டு மக்கள் முழு ஒத்துழைப்பையும் வழங்கவேண்டும்' என்று சுகாதார அமைச்சின் பேச்சாளர் மருத்துவ நிபுணர் ஜயருவன் பண்டார இன்று தெரிவித்தார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
'எமக்கு முன்னால் பெரும் அச்சுறுத்தல் காணப்படுகின்றது, அது இன்னும் குறையவே இல்லை. நாளாந்தம் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்தே செல்கின்றது. இதனால் எதிர்காலம் என்பது அவதானம்மிக்க காலப்பகுதியாகும். கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதற்காக சுகாதார தரப்பினரும், பாதுகாப்பு துறையினரும் முழுவீச்சுடன் செயற்பட்டுவரும் நிலையில் அதற்கு மக்களும் முழு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். தமக்கு கொரோனா தொற்றாத வகையில் சுகாதார பாதுகாப்புடன் இருக்கவேண்டும் என்பதுடன், மற்றையவருக்கு எம்மூலம் தொற்றாமல் இருப்பதையும் உறுதிப்படுத்திக்கொள்ளவேண்டும். தற்போது நாளாந்தம் 7 ஆயிரம் வரையில் பி.சி.ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. செயலிழந்துள்ள இந்திரமும் சரிசெய்யப்படும். சீனாவில் இருந்து துறைசார் நிபுணர்களை அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேவேளை, தனிமைப்படுத்தல் நடவடிக்கை என்பது சிறைப்பிடிப்பு சிறைவைப்பு அல்ல என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். உங்களினதும், உங்கள் உறவினரது நலன்கருதியுமே தனிமைப்படுத்தல் நடவடிக்கை இடம்பெறுகின்றது. மக்கள் பாதுகாப்புக்காகவே வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்நடவடிக்கை முன்னெடுக்கப்படுகின்றது. தனிமைப்படுத்தல் முகாமில் அனைத்து வசதிகளும் உள்ளன. எனவே தனிமைப்படுத்தல் நிலையங்களுக்குச் செல்வதற்கு எவரும் அச்சம் கொள்ளவேண்டியதில்லை' என்றார். (ம-44)


## கம்பஹா உட்பட 68 பொலிஸ்...

திங்கட்கிழமை காலை 5 மணிக்கு 49 பொலிஸ் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு தளர்த்தப்பட்டாலும் ஏனைய 68 பொலிஸ் பிரிவுகளில் ஊரடங்கு தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரான பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.
இதுதொடர்பில் அவர் இன்று மேலும் கூறியதாவது,
'மேல் மாகாணம் உட்பட நாட்டில் 117 பொலிஸ் பிரிவுகளில் நேற்றிரவு முதல் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு நடைமுறையில் உள்ளது. ஏற்கனவே 68 பொலிஸ் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருந்த நிலையில் புதிதாக 49 பிரிவுகள் இணைக்கப்பட்டன. கம்பஹா மாவட்டத்தில் 37 பொலிஸ் பிரிவுகளிலும் கொழும்பு மாவட்டத்தில் 21 பொலிஸ் பிரிவுகளிலும், களுத்துறை மாவட்டத்தில் 5 பொலிஸ் பிரிவுகளிலும், குருணாகலை மாவட்டத்தில் 5 பொலிஸ் பிரிவுகளிலும் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்தும் அமுலில் இருக்கும். திங்கட்கிழமை இப்பகுதிகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நீக்கப்படாது.
புதிதாக இணைக்கப்பட்ட 49 பிரிவுகளில் நீக்கப்படும். அதுவும் பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகளிலேயே இறுதித் தீர்மானம் தங்கியுள்ளது. எது எப்படியிருந்தாலும் நாடு முழுவதும் தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை பிறப்பிக்கும் தீர்மானம் தற்போதைக்கு இல்லை' என்றார்.
அதேவேளை, தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்ட நாளில் இருந்து இன்று காலை 6 மணிவரை, ஊரடங்கு சட்டத்தைமீறிய ஆயிரத்து 260 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளரான பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (ம-44)

## இலங்கையின் மூன்றாவது கொவிட் அலை

# வைரஸ் தொடர்பில் ஆராய்ச்சிகள் ஆரம்பம்

கொழும்பு, ஒக்.30



தற்போது நாட்டில் பரவி வரும் கொரோனா வைரஸ் தொடர்பான ஆராய்ச்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனடிப்படையில், மினுவாங்கொட கொரோனாப் பரவலுடன் ஏற்பட்ட கொரோனாத் தொற்றானது இதற்கு முன்னர் இலங்கையில் பரவியதா அல்லது வேறு வைரஸா என்று ஆராய்ந்து பார்ப்பதற்கு விஞ்ஞான ரீதியான பரிசோதனை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாடு முழுவதும் பரவி வரும் வைரஸ் தொற்றானது, மிகவும் வேகமாக பரவி வருகின்றது. இது தொடர்பான பரிசோதனை ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. .ப் பரிசோதனை முடிவுகள் தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என இராணுவ தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். அதற்கமைய கந்தகாடு, மினுவாங்கொட பரவல் மற்றும் பேலியகொடவில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனாத் தொற்றாளர்கள் தொடர்பில் பரிசோதனைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன..

சீதுவையில் 5 நட்சத்திர ஹொட்டலில் கடந்த செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி தனிமைப்படுத்தப்பட்ட துருக்கியில் இருந்து வந்த யுக்ரேன் விமான சேவை ஊழியர்களுக்கு உதவி செய்த ஹொட்டல் ஊழியர்கள் மூலம் இவ் வைரஸ் மீண்டும் பரவியிருக்க வாய்ப்புக்கள் உள்ளன என புலனாய்வுப் பிரிவு சுட்டிக் காட்டியது.

இது நூற்றுக்கு 80 வீதம் சரியான தெனவும், மேலும் சில முறைகள் ஊடாக அதனை உறுதிசெய்வதற்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன எனவும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார். (ந-இ)



## மரக்கடத்தல் முறியடிப்பு

வவுனியா, ஒக்.30

வவுனியா பூவரசங்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இயங்கராவூர் பகுதியில் சட்டவிரோதமான முறையில் கடத்திச் செல்லப்பட்ட முதிரை மரக்குற்றிகளை பூவரசங்குளம் விசேட அதிரடிபடையினர் இன்று அதிகாலை கைப்பற்றியுள்ளனர்.

இந்தப் பகுதியில் முதிரை மரங்கள் கடத்தப்படவுள்ளன என பூவரசங்குளம் விசேட அதிரடிபடையினருக்கு கிடைத்த தகவலையடுத்து, அந்தப் பகுதிக்கு விரைந்த அவர்கள் இக் கடத்தலை முறியடித்தனர்.

இந்தச் சம்பவத்தில் 8 இலட்சம் ரூபா பெறுமதியான 7 முதிரை மரக்குற்றிகள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், அவற்றை கடத்திச்செல்லப் பயன்படுத்தப்பட்ட கப் ரக வாகனமும் மீட்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட முதிரை குற்றிகளும், வாகனமும் வவுனியா பூவரசங்குளம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பூவரசங்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ற-ரி3)

## மின்மானி வாசிப்பாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள்

*நாட்டு மக்களிடம் மின்சார சபை வேண்டுகோள்*

கொழும்பு, ஒக்.30

தற்போதைய சூழ்நிலையில் மின்மானி வாசிப்பாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு மின்சார சபை கேட்டுக் கொண்டுள்ளது.

வீடுகளில் உள்ள மின்சார அளவீட்டுப் பெட்டியின் மானி தெளிவாகத் தெரியும்படி வைத்திருக்குமாறும், பட்டியலை வழங்கவரும் மின்மானி வாசிப்பாளர்களிடத்தின் அருகில் செல்லாது மின்சாரப் பட்டியலைப் பெற்றுக்கொள்ளுமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாட்டில் கொரோனாத் தொற்று வேகமாக அதிகரித்துள்ள நிலையில், இது தொடர்பில் பொதுமக்கள் அதிக கவனம் செலுத்துமாறு மின்சார சபையின் நுகர்வோர் ஒருங்கிணைப்பு அதிகாரிகள் சங்கம் பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ந-இ)



## விமானப்படை தளபதி பிரதமருடன் சந்திப்பு!

கொழும்பு, ஒக்.30

இலங்கையின் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுமங்கள டயஸ் சேவையிலிருந்து ஓய்வுபெறவுள்ள நிலையில், பிரதமர் மஹிந்த ராஜபக்சவை அலரி மாளிகையில் நேற்றுச் சந்தித்தார். இவர்கள் இருவரிடையே நட்பு ரீதியான கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதன்போது இலங்கையின் பாதுகாப்பு நிலைமை மற்றும் விமானப்படையின் தற்போதைய செயற்பாடுகள் தொடர்பில் விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் சுமங்கள டயஸால் பிரதமருக்கு விளக்கமளிக்கப்பட்டதுடன், தனது சேவைக் காலத்தில் வழங்கப்பட்ட ஆதரவு தொடர்பிலும் நன்றி பாராட்டினார். 17 ஆவது விமானப்படைத் தளபதியாக இருந்து இலங்கைக்கு ஆற்றிய சேவை தொடர்பில் பிரதமர் வாழ்த்து தெரிவித்தார்.

அத்துடன், கொரோனா நிலைமைக்கு முகங்கொடுப்பதற்கு தனிமைப்படுத்தல் செயற்பாடுகள் மற்றும் பிற நடவடிக்கைகளின் மூலம் விமானப்படை இதுவரை செய்த சேவைகளையும் பாராட்டினார்.

இவர் எதிர்வரும் நவம்பர் 2 ஆம் திகதி விமானப்படைத் தளபதி பதவியிலிருந்து ஓய்வு பெறவுள்ளார். (ற-இ)

## பண்டாரவளையில் கொரோனா தொற்று சிகிச்சை நிலையம்

பண்டாரவளை, ஒக்.30

பண்டாரவளையில் கொரோனா சிகிச்சை நிலையமொன்றினை அமைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என அரச வைத்திய சங்கத்தின் பதுளை கிளைத் தலைவர் பாலித்த ராஜபக்ச தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, பண்டாரவளை அரசினர் மருத்துவமனை வளாகத்தில், மேற்படி கொரோனா நிலையப் பிரிவு இடம்பெறும். இப் பிரிவில் நூறு நோயாளர்கள் சிகிச்சை பெற்று வரும் வகையில் நூறு கட்டில்கள் போடப்பட்டுள்ளன. நூறு நோயாளர்கள் ஒரு தடவையில் சிகிச்சைப் பெறும் வகையில் அனைத்து வசதிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். (வ-இ)

## சி.ஐ.டி அதிகாரிகளுக்கும் கொரோனாத் தொற்று

கொழும்பு, ஒக்.30

கொழும்பு குற்றவியல் பிரிவைச் சேர்ந்த 14 அதிகாரிகள் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

குறித்த பிரிவைச் சேர்ந்த அதிகாரியொருவர் முன்னர் கொரோனாத் தொற்றுக்குள்ளாகியமை கண்டறியப்பட்டது. இதையடுத்து அவருடன் தொடர்புகளைப் பேணிய 20 அதிகாரிகள் மீது பி.சி.ஆர். சோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. இந்த பிசி.ஆர் சோதனை முடிவுகளில் 13 பேர் கொரோ னாத் தொற்றுக்குள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. (ந-இ)

## மேல் மாகாணத்தில் நிகழ்வுகளுக்குத் தடை

கொழும்பு ஒக்.30

மேல் மாகாணத்தில் திருமணங்கள் மற்றும் சமய நிகழ்வுகள் தற்காலிகமாக தடை செய்யப்பட்டுள்ளன. கொவிட் 19 பரவலைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, மேல் மாகாணத்தில் நேற்று நள்ளிரவு முதல் நடைமுறையிலுள்ள மூன்று நாள் ஊரடங்கு காலப்பகுதியில் ஊரடங்கு பாஸ் வழங்கப்படாது. இருப்பினும் அத்தியாவசிய தேவைக்கு மட்டுமே பாஸ் வழங்கப்படும் என்று ஜனாதிபதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், ஊரடங்கு உத்தரவை மீறுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் ஜனாதிபதி அலுவலகம் அறிவித்துள்ளது. (ந-இ)

## மீன் விற்பவருக்கு கொரோனா; வாங்கியோருக்கு வலைவீச்சு

பதுளை, ஒக்.30

வெலிமடை சாப்புக்கடை எனும் இடத்தில் மீன் விற்ப னையாளர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதையடுத்து 27, 28, 29 ஆம் திகதிகளில் அந்த மீன் விற் பனை நிலையத்தில் மீன் கொள்வனவுகளை மேற் கொண்டவர்கள் உடனடி யாக பதுளை பொதுச் சுகாதாரப் பிரிவினர் மற்றும் வெலிமடை பொலிஸ் நிலையத்தினர் ஆகியோரு டன் தொடர்பு கொள்ளு மாறு கேட்டுக்கொள்ளப்பட் டுள்ளனர். தவறின் அப் பகுதி சுகாதார சேவை பணியகத் தின் 0572245178 தொலை பேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள் ளது. மீன் விற்பனையாளருக்கு கொரோனா அறிகுறிகள் தென்பட்டதையடுத்தே பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதில் அவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவருக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது என்பது தொடர் பில் விசாரணைகள் ஆரம்பிக் கப்பட்டுள்ளன. அவர் கொழும்பு ஐ.டி.எச். மருத்து வமனைக்கு கொண்டு செல லப்பட்டுள்ளார். (வ-இ)

## நடமாடும் பி.சி.ஆர் சோதனை; தனியார் வைத்தியசாலையால் அறிமுகம்

கொழும்பு, ஒக்.30

கொழும்பில் உள்ள தனியார் வைத்திய சாலையொன்று வாகனத்தில் இருந்த வாறே பி.சி.ஆர் பரிசோதனையை செய்துகொள்ளக்கூடிய புதிய வச தியை அறிமுகப்படுத்தியுள்ளது.

இவ் வசதி மூலம் தாமாக பி.சி.ஆர். சோதனை செய்துகொள்ள விரும் புபவர்கள் வைத்தியசாலை மற்றும் பி.சி.ஆர் பரிசோதனை நிலையங்களுக்குச் செல்லாமல் வாகனத்திலிருந்தவாறே பி.சி.ஆர் சோதனையை செய்து கொள்ளமுடி யும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது,

தனியார் வைத்தியசாலைகளில் ஒரு பி.சி.ஆர் பரிசோதனைக்கு 6000 ரூபா நிர்ணயிக்கப்பட்டபோதும் பல தனியார் வைத்தியசாலைகள் நிர்ண யிக்கப்பட்ட விலையை விட அதிக கட்டணம் அறவிட்டு வருகின்றன என மக்கள் விசனம் வெளியிட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ந-இ)

## எதிர்வரும் நாள்கள் மிகச் சவாலானவை

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் எச்சரிக்கை



கொழும்பு, ஒக்.30

நாட்டில் எதிர்வரும் மூன்று நாள்கள் மிகச் சவாலானவை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

ஊரடங்கு அமுலில் உள்ள பகுதிக ளில் அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப் பட்டு வருகின்றது. பொதுமக்கள் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி செயற்பட வேண்டும். அத்துடன் திருமண விழாக்கள், சுற்றுலா செல்லுதல், திருவிழாக்களில் பங்கேற்றல் உட்பட ஒன்றுகூடல்களைத் தவிர்க்க வேண்டும்.

ஊரடங்கு அமுலில் இல்லாத பகுதிகளில் உள்ள மக்கள் உட்பட அனைவரும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம் எனத் தெரிவித் துள்ளார். (ந-இ)



## மருந்தக அனுமதிப்பத்திரத்துக்கு ஊரடங்கு "பாஸ்"

கொழும்பு, ஒக்.30

ஊரடங்கு காலப்பகு தியில் மருந்துகளை விநியோகிக்கும் போது, மருந்தகங்க ளுக்கு வழங்கப்பட் டுள்ள அனுமதிப்பத் திரத்தை ஊரடங்கு அனுமதியாகப் பயன்படுத்த முடியும் என தேசிய மருந்து கள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபை தெரி வித்துள்ளது.

தனிமைப்படுத்தல் ஊரடங்கு காலப்பகு தியில், தடையின்றி பொதுமக்களுக்கு மருந்துகளைப் பெற் றுக்கொடுக்கும் நோக்கில் இந்த அனுமதி வழங்கப்பட் டுள்ளது.

அத்துடன், இவ்வாறு வீடுகளுக்கு மருந்து களை விநியோகிக் கும்போது, தனிமைப் படுத்தல் சுகாதார விதிமுறைகள் மற்றும் தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தல் அதிகாரசபையின் வழிகாட்டல்கள் ஆகியவற்றுக்கு அமைய மருந்தக உரிமையாளர்கள் செயற்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப் பட்டுள்ளது. (ந-இ)

## வடக்கின் சில மாவட்டங்களில் மழை பெய்யும் சாத்தியம்



கொழும்பு, ஒக்.30

வடக்கு மாகாணத் தின் முல்லைத்தீவு, வவுனியா மாவட் டங்களில் மழை பெய்யக்கூடிய சாத்தியம் உள்ளது என எதிர்வு கூறப் பட்டுள்ளது. வளிமண்டலவியல் திணைக்க ளத்தினால் வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. நாட்டின் சில பகுதிகளில் மழையுடனான காலநிலை நிலவக்கூடும். ஊவா, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் அம்பாந்தோட்டை, முல்லைத்தீவு மற்றும் வவுனியா மாவட்டங்களிலும் பல இடங்க ளில் பி.ப. 2 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய் யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. ஊவா மாகாணத்திலும் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களிலும் 50 மி.மீ க்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைக ளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங் களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ளத் தேவையான முன்னெச் ரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள் எனத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (வ-இ)

## சிறைச்சாலைகளில் சிறப்புத் திட்டம்

கொழும்பு, ஒக்.30

சிறைச்சாலைகளுக்குள் கொவிட்-19 தொற்று பரவுவ தைத் தடுக்கும் நோக்கத்துடன் அவசர திட்டம் அமுலாக்கப்படு கிறது. சிறைச்சாலைகளுக்குள் கொவிட்-19 தொற்றாளர்கள் இனங்காணப்படும் சந்தர்ப்பத் தில் செயற்பட வேண்டிய விதம் தொடர்பில் இத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்கேற்ப துரித நடவடிக்கை எடுக்குமாறு இராஜாங்க அமைச்சர் சுதர்சினி பெர்னாண்டோ புள்ளே சிறைச் சாலை உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

கொவிட்-19 தொற்றுப் பரவலை சமாளிப்பதற்கான வழிகாட்டல் கள் பற்றி சிறைச்சாலை பணியா ளர்கள், சுகாதார சேவை வழங்க நிஞர்கள், சிறைச்சாலை உத்தி யோகத்தர்கள் ஆகியோருக்கு விளக்கம் அளிக்கப்படவுள்ளது.

கைதிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தல், கைதிகளை வெளிவேலைகளில் ஈடுபடுத்துவ தைத் தவிர்த்தல் போன்ற நடவ டிக்கைகளும் மேற்கொள்ளப்பட வுள்ளன. அவசரநிலை ஏற்படுமா னால் வெலிக்கடை சிறைச்சாலை மருத்துவமனையை சிகிச்சை நிலையமாக பயன்படுத்துவதற் கும் திட்டமிடப்படுகிறது. (நஇ)

## தொழில் திணைக்கள பாதுகாப்பு அதிகாரிகள் நால்வருக்கும் தொற்று

கொழும்பு, ஒக்.30

நாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள தொழில் திணைக்கள பிரதான அலுவல கத்தில் கடமையாற்றும் பாதுகாப்பு அதிகாரிகள் 4 பேருக்கும் தொழில் அமைச்சின் சாரதி ஒருவருக்கும் கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பேலியகொட மீன் சந்தைக்குச் சென்ற அந்த திணைக்கள கட்டடத்தின் உணவக பணியாளரிடம் இருந்து அவர்களுக்கு கொரோனா பரவியிருக்கக்கூடும் என சந்தேகிக்கப்படுகிறது. (ந-இ)

# மாப்பிள்ளை டென்மார்க்கில் மணப்பெண் யாழில்

## ‘சூம்’ மில் டும்.... டும்... டும்...

யாழ்ப்பாணம், ஒக்.30

யாழ்ப்பாணத்திலுள்ள பெண் ஒருவருக்கும், டென்மார்க்கிலுள்ள புலம்பெயர் தமிழ் இளைஞருக்கும் நேற்று ‘சூம்’ செயலியில் திருமணம் இடம்பெற்றது. இதன்படி ‘சூம்’ தொழில்நுட்பத்தில் பெண்ணுக்கு, டென்மார்க் மாப்பிள்ளை தாலி கட்டினார்.

உரும்பிராயைச் சேர்ந்த பெண்ணுக்கும் டென்மார்க்கில் வதியும் ஊரெழுவை சேர்ந்த இளைஞனுக்குமே இவ்வாறு சூம் செயலி மூலம் திருமணம் நடைபெற்றுள்ளது.

இந்த வருட ஆரம்பத்தில் திருமணம் நிச்சயிக்கப்பட்டது.

கொரோனா ஊரடங்கு காரணமாக மணமகன் இலங்கைக்கு வருவதில் சிரமமிருந்தது. இதனால் பல மாதங்களாக திருமணம் பிற்போடப்பட்டது. இந்த வருட இறுதியில் இலங்கை நிலவரம் சுமூகமாகும் என எதிர்பார்க்கப்பட்டு வந்த நிலையில், இலங்கையில் கொரோனா மூன்றாவது அலையின் தாக்கம் தீவிரமாகி மீண்டும் நிலைமை மோசமாகியுள்ளது. பெண்ணின் சாதகப்படி இந்த வருட இறுதிக்குள் திருமணம் செய்ய வேண்டுமென பெண்ணின் பெற்றோர் அழுங்குப்பிடி பிடித்ததையடுத்து, சூம் தொழில்நுட்பத்தில் தற்போது தாலி கட்டிக் கொள்வதென்றும், அடுத்த ஆண்டில் பதிவுத்திருமணம் செய்து கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டு, நேற்று இந்த நிகழ்வு இடம்பெற்றது எனத் தெரிவித்துள்ளனர். (ற-இ)





# வர்த்தக நிலையங்கள் தொடர்ச்சியாகப் பூட்டு

வவுனியா, ஒக்.30

வவுனியா வடக்கு நெடுங்கேணியில் தொடர்ச்சியாக வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளது. இந்த நிலையில் கடந்த 5 நாள்களாக நெடுங்கேணி பிரதேசம் மக்கள் நடமாட்டம் இன்றி காணப்படுகின்றது.

வவுனியா நெடுங்கேணியில் வீதி அபிவிருத்திப் பணிகளில் ஈடுபட்ட 14 ஊழியர்களுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டதை அடுத்து நெடுங்கேணி மற்றும் அதனை அண்டியுள்ள பிரதேசங்கள் வீதி அபிவிருத்திப் பணி மேற்கொள்ளப்படும் பிரதேசம் ஆகியவற்றில் உள்ள வர்த்தக நிலையங்கள் அனைத்தையும் மூடுமாறு சுகாதாரப் பிரிவினர் விடுத்த வேண்டு கோளுக்கிணங்க கடந்த 25 ஆம் திகதியிலிருந்து அந்தப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

இந்த நிலையில் சமூகப் பரவலைத் தடுப்பதற்காக சுகாதாரத் திணைக்களத்தினர் வீதி அபிவிருத்திப் பணியை மேற்கொண்ட 82 நபர்களை சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தியுள்ளனர். (ற-18)

# மேல் மாகாணத்தின் பள்ளிவாசல்களுக்கு பூட்டு

கொழும்பு, ஒக்.30

மேல் மாகாணத்திலுள்ள அனைத்து பள்ளிவாசல்களையும் மறு அறிவித்தல் வரை மூடுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

முஸ்லிம் கலாசார விவகார திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் வழிகாட்டுதல்களுக்கு அமைய வக்பு சபையினனால் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. பள்ளிவாசல்களை திறப்பது தொடர்பில் பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தெர்விக்கப்பட்டுள்ளது. (ந-இ)

# உதவிகள் ஏதும் இன்றி தொழிற்சாலை ஊழியர்கள்

## டபிந்து கலக்டிவ் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக்.30

தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ள ஆடை தொழிற்சாலை ஊழியர்களுக்கு எந்தவித உதவியும் கிடைக்கவில்லை என டபிந்து கலக்டிவ் என்ற அமைப்பு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் மத்தியில் பணியாற்றும் டபிந்து கலக்டிவ் அமைப்பின் இணைப்பாளர் சமிலா துசாரி தெரிவித்துள்ளதாவது,



ஆடைத்தொழிற்சாலை ஊழியர்கள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளனர். தனிமைப்படுத்தலில் உள்ள ஆடை தொழிற்சாலை ஊழியர்களிடம் உணவைக் கொள்வனவு செய்ய பணம்கூட இல்லாதநிலை காணப்படுகின்றது. தனிமைப்படுத்தப்பட்டுள்ள ஆடைதொழிற்சாலை ஊழியர்களுக்கு உதவவிரும்புபவர்கள் கூட அவர்களைத் தொடர்புகொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. சிலருக்கு அவர்களது தொழிற்சாலைகள் உணவினை வழங்கியுள்ளன ஆனால் அவை போதுமானவையல்ல ஏனையவர்களுக்கு எந்த உதவியும் கிடைக்கவில்லை. மேல் மாகாணம் முழுவதும் ஊரடங்கு அறிவிக்கப்பட்டுள்ளதால் நிலைமை இன்னமும் மோசமடையும் எனத் தெரிவித்துள்ளார். (வ-இ)

# இனந்தெரியாதவரால் குடும்பப் பெண் தாக்குதல்

கொடிகாமம், ஒக்.30

வீதியால் நடந்து சென்ற குடும்பப் பெண் ஒருவரை இனந்தெரியாத நபர் ஒருவர், தடியால் தாக்கியதில் மயங்கிய நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் ஏ-9 வீதியிலுள்ள கொடிகாமம் புகையிரத நிலையத்துக்கு முன்பாக நேற்று வியாழக்கிழமை பிற்பகல் இடம்பெற்றது.

கொடிகாமம் மருதடிப் பிள்ளையார் கோவிலடியில் வசிக்கும் சுதாகரன் அழகேஸ்வரி (வயது 32) என்பவரே இவ்வாறு தாக்குதலுக்குள்ளாகியுள்ளார். அந்தப் பெண் உடல் முழுவதும் அடிகாயங்களுடன் வீதியில் மயங்கிய நிலையில் இருந்தபோது, வீதியால் சென்ற இளைஞர் ஒருவர், வீதியால் சென்ற வேறு பெண்களின் உதவியுடன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்த்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(ற-159)

## தனிமைப்படுத்தல் ஊரடங்கு:

# வெளியிடம் சென்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை!

தனிமைப்படுத்தல் ஊரடங்கு தொடர்பில், முன்கூட்டியே விடுக்கப்பட்ட அறிவுறுத்தல்களையும் மீறி மேல் மாகாணத்தில் இருந்து வெளி இடங்களுக்குச் சென்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண இன்று தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

கொழும்பு உட்பட மேல் மாகாணத்தில் இருந்து வெளியிடங்களுக்குச் செல்வதற்கு முன்கூட்டியே திட்டமிட்டிருந்தால் அதற்கான ஏற்பாடுகளைக் கைவிடுவதற்காகவே தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்துவது தொடர்பில் முன்கூட்டியே அறிவித்தல் விடுக்கப்பட்டது. பெரும்பாலானவர்கள் எமது அறிவித்தலை ஏற்று உரிய வகையில் செயற்பட்டனர், ஆனால் சிலர் அதைக் கருத்தில் கொள்ளாது வெளியிடங்களுக்குச் சென்றுள்ளனர். வெளியேற்றத்தைத் தடுப்பதற்கு நாம் முயற்சித்த போதும் அது முழுமையாக வெற்றியளிக்கவில்லை. மேல் மாகாணத்தில் இருப்பவர்களை வெளியிடங்களுக்கு அனுப்புவதைத் தடுப்பதே தனிமைப்படுத்தல் ஊரடங்கின் நோக்கமாக இருந்தது. ஆனால் அதை வாய்ப்பாகப் பயன்படுத்தி சிலர் வெளியேறியுள்ளனர். எதிர்வரும் திங்கட்கிழமை மேல்மாகாணம் திறக்கப்படும். இதன்போது மேல்மாகாணத்துக்குள் நுழையும் பகுதிகளில் தீவிர விசாரணைகள் இடம்பெறும். இதில் ஊரடங்கு உத்தரவின் பின்னர் வெளி இடங்களுக்குச் சென்றவர்கள் தொடர்பான விபரம் திரட்டப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் -என்றார். (ற-44)

# ஆய்வுகூட வசதிகள் இல்லை; பி.சி.ஆர். சோதனைகள் தேக்கம்

## ஆங்கில ஊடகம் தகவல்

கொழும்பு, ஒக்.30

போதியளவு ஆய்வு கூட வசதிகள் இல்லாமையால் சேகரிக்கப்பட்ட பிசிஆர் மாதிரிகளை சோதனைக் குட்படுத்தி வெளியிட முடியாத நிலை உருவாகியுள்ளது என ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.




கொரோனாத் தொற்றாளர் என சந்தேகிக்கப்பட்ட பத்தாயிரம் பேரிடமிருந்து சேகரிக்கப்பட்ட மாதிரிகளே இவ்வாறு சோதனைக்கு உட்படுத் தப்படாமல் உள்ளன. நான்கு மருத்துவமனைகள் இந்த நிலையை எதிர்கொண்டுள்ளதால் கொரோனா வைரஸை கட்டுப்ப டுத்துவதற்கான முயற்சிகள் கடும் பாதிப்பை எதிர்கொண்டுள் ளன என அந்த ஊடகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, கராப்பிட்டிய மருத்துவமனையில் 2 ஆயிரத்து 145 மாதிரிகளும், அனுராத புரம் மருத்துவமனையில் ஆயிரத்து 500 மாதிரிகளும், தேசிய தொற்றுநோய் மருத் துவமனையில் ஆயிரத்து 800 மாதிரிகளும், மருத்துவ ஆராய்ச்சி நிறுவகத்தில் 4 ஆயிரத்து 500 மாதிரிகளும் இவ்வாறு குவிந்து கிடக் கின்றன என அந்த செய்தியில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது. (வ-இ)



# காட்டு யானை தாக்கி வயோதிபப் பெண் மரணம்!

அநுராதபுரம், ஒக்.30

அநுராதபுரம் கஹட்ட கஸ்திகிலிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இஹலகம பகுதியில் காட்டு யானை தாக்கி வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றிரவு இடம்பெற்றது. சுத்தாகே விமலாவத்தி (வயது64) என்ற பெண்ணே இவ்வாறு யானைத் தாக்குதலுக்கு உள்ளாகி உயிரி ழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து தெரிய வருவதாவது,

வீட்டுக்கு அருகில் சத்தம் கேட்ட தையடுத்து கதவைத் திறந்து வெளியே செல்ல முற்பட்ட போது, முன்னால் நின்ற காட்டு யானை தூக்கி வீசியதாகவும், அதை அடுத்து அந்த இடத்தி லேயே வயோதிபப் பெண் உயிரிழந்துள்ளதாகவும் பொலி ஸார் தெரிவித்தனர். (ற-இ)

# மட்டக்களப்பில் மேலும் இருவருக்கு தொற்று

மட்டக்களப்பு, ஒக்.30

மட்டக்களப்பு மாவட்டத்தில் மேலும் இருவருக்கு கொவிட் 19 தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவடிமுன் மாரி பகுதியில் ஒருவரும் ஓட்டமாவடி யில் ஒருவரும் இவ்வாறு இனங்காணப் பட்டுள்ளனர். ஓட்டமாவடியில் இனங்கா ணப்பட்டவர் பேலியகொட மீன்சந்தை கொத்தணியுடன் தொடர்புடையவர் எனவும் மாவடிமுன்மாரியை சேர்ந்தவர் கொழும்பில் இருந்து வந்தவர் எனவும் கிழக்கு மாகாண சுகாதார பணிப்பாளர் டாக்டர் அழகையா லதாகரன் தெரிவித் தார்.

இதேநேரம் குறித்த நபர் கடந்த 27ஆம் திகதி கொழும்பில் இருந்து தனியார் பேருந்து ஒன்றில் மட்டக்களப்புக்கு வந்துள்ளார். அவர் சுகவீனம் காரணமாக மகிழடித்தீவு வைத்தியசாலைக்கு சிகிச்சைக்கு சென்ற நிலையில் அங்கு பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப் பட்ட நிலையிலேயே தொற்று உறுதிப்ப டுத்தப்பட்டுள்ளது என சுகாதார பிரிவி னர் தெரிவித்துள்ளனர். (ந-இ)



இலங்கை விமானப் படையின் புதிய தளபதியாக எயார் வைஸ் மார்ஷல் சுதர்ஷன பதிரண நியமிக்கப்பட்டுள்ளார். இலங்கை விமானப் படையின் 18ஆவது தளபதியாக நியமிக்கப் பட்டுள்ள இவருக்கு, நவம்பர் மாதம் 2ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் ஜனாதிபதியினால் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது. (ந)

## சுகாதார நடைமுறைகளை மீறி

# தவறணைக்குச் சென்றோர் தனிமைப்படுத்தலில்

மட்டக்களப்பு, ஒக்.30



சுகாதார நடைமுறை களைப் மீறிச் செயற்பட்ட 17 நபர்கள் மட்டக்களப் பில் நேற்றுத் தனிமைப் படுத்தப்பட்டனர். மட்டக்களப்பு கோட் டைமுனை பொதுச்சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட கள்ளுத் தவறணை உரி மையாளர் மற்றும் அதன் வாடிக்கையாளர் களே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ள னர். பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட சோத னையில் இவர்கள் பிடிபட்டுள்ளனர். மட்டக் களப்பின் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை 32ஆக அதிகரித்துள்ளது. இதை யடுத்து சுகாதார நடைமுறைகள் கடுமையாக் கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (வ-46)



# காவலூரிலும் பொங்கியது கடல்

யாழ்ப்பாணம், ஒக்.30

தீவகத்தின் பல பகுதிகளில் கடல் பெருக்கெடுத்து, அரு கில் உள்ள குடிமனைகளுக்குள் புகுந்துள்ளது. ஏற்கனவே பூநகரி, மற்றும் நாவாந்துறைக் கடல் பெருக்கெடுத்து கிராமத்துக்குள் புகுந்தது என்று தெரிவிக்கப்பட்ட நிலையில், நேற்று இரவு ஊர்காவற்றுறையி லும் கடல் பெருக்கெடுத் துள்ளது.

இவ்வாறு பெருக்கெடுத்த கடல், 50 முதல் 70 மீற்றர் வரையான தூரத்துக்கு அருகில் உள்ள குடிமனைகளுக்குள் புகுந்தது. இதனால், கிணறு கள், மற்றும், விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.



ஊர்காவற்றுறையில் வடக்கு நாரந்தனை, தம்பாட்டி, தளையடி, போன்ற பகுதிகளில் கடல் பெருகியுள்ளது.

இவ்வானதொரு சம்பவம் கடந்த காலங்களில் இடம் பெற்றதில்லை. அதிக மழை என்றால், வெள்ளப்பெருக்கு ஏற்படும். ஆனால் தற்பொழுது மழையில்லாமலேயே கடல் பெருகி கிராமத்துக்குள் வந்துள் ளது. இதனால் எமது கிணறு கள், விவசாய, தோட்ட நிலங் கள் உவராக மாறும் அபாயம் உள்ளன" என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர். சம்பவம் தொடர்பில் இடர் முகா மைத்துவப் பிரிவினர் நேரில் சென்று ஆராய்ந்துள்ளனர். (ப)

# இயற்கைக்கு எதிராக செயல்கள் எதிர்காலத்துக்கு பெரும் ஆபத்து

## *எச்சரிக்கை விடுக்கும் ஐ.நா*

நியூயோர்க், ஒக்.30

இயற்கைக்கு எதிரான மனிதனின் செயல்கள் வருங்காலத்தில் பல தொற்று நோய்கள் உருவாக வழிவகுக்கும் என்று ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. இதுதொடர்பில் அது வெளியிட்ட அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கொரோனா வைரஸ் போன்று 8 லட்சத்து 50 ஆயிரம் வகையான வைரஸ்கள் உள்ளன. அவை விலங்குகளிடம் உள்ளன. அவை மனிதர்களைத் தாக்கக் கூடும். இயற்கைக்கு எதிரான மனிதனின் நடவடிக்கைகள் எதிர்காலத்தில் பல தொற்று நோய்கள் உருவாக வழிவகுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-இ)

# போராட்டத்தை அடக்குவதற்கு பிலடெல்பியாவில் ஊரடங்கு



அமெரிக்காவின் பிலடெல்பியா நகரில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கறுப்பின இளைஞர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்தைத் தொடர்ந்து கடந்த இரண்டு நாள்களாக அங்கு ஆர்ப்பாட்டங்கள் கலவரங்கள் இடம்பெற்று வந்தன. இந் நிலையிலேயே அந்த நகரில் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. கொல்லப்பட்ட வோல்டர் வொல்லஸ் மனநலம் பாதிக்கப்பட்டு இருந்தார் என்று அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். ஆனால் அவர் கையில் வைத்திருந்த கத்தியை கிழே போட மறுத்ததை அடுத்தே துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். கடந்த செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டக்காரர்கள் பொலிஸாருடன் மோதலில் ஈடுபட்டதோடு நகரின் வர்த்தக நிலையங்களும் கொள்ளையடிக்கப்பட்டன. (வ-இ)



# முருகனுக்கு கொரோனா?

சென்னை, ஒக்.30

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டுள்ள முருகன் 4 நாள்களாக காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் முருகன் உடல் நலத்துடன் உள்ளார் எனவும் அவருக்கு கொரோனா தொடர்பான எந்த பரிசோதனையும் அவருக்கு மேற்கொள்ளப்படவில்லை என்று சிறைத் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (வ-இ)



# கொரோனா இன்றி 200 நாள்கள்

## *மகிழ்ச்சியில் தாய்வான்*

தய்பெய், ஒக்.30

தாய்வானில் இறுதியாக கொரோனாத் தொற்றாளர் அடையாளம் காணப்பட்டு 200 நாள்கள் கடந்துள்ளது. கொரோனாப் பரவலைக் கட்டுப்படுத்துவதில் தாய்வான் சிறப்பாக செயற்பட்டு வருகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. தாய்வானில் இறுதியாக ஏப்ரல் 12ஆம் திகதி கொரோனாத் தொற்றாளர் ஒருவர் இனங்காணப்பட்டார். அதன் பின் இதுவரை யாருக்கும் தொற்று உறுதிப்படுத்தப்படவில்லை என அந்நாட்டு நோய் கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது. இதுவரை அந்நாட்டில் 553 கொரோனாத் தொற்றாளர்கள் இனங்கானப்பட்டுள்ளனர் என்பதுடன் அவர்களில் 7 பேர் உயிரிழந்துள்ளனர். (வ-இ)



# கொரோனாக்குப் பின் மீண்டெழுந்த ‘வுஹான்’

இந்த தலைமுறை தன் நினைவில் எப்போதும் வைத்திருக்கும் நகரங்களில் ஒன்று வுஹான். இந்த நகரத்தில் இருந்துதான் கொரோனாத் தொற்று பரவ தொடங்கியது. இது உலக நாடுகளை முடக்கிப் போட்டது.

ஆனால், இப்போது அந்த நகரம் எப்படி இருக்கிறது எனப் பலருக்குத் தெரியாது. ஆனால், அந்த நகரத்தின் இப்போதைய நிலையை அறிந்தால் ஆச்சரியம் கொள்வீர்கள்.

ஆம், இப்போது அந்த நகரம் சீனாவின் முக்கியமான சுற்றுலா மையமாக மாறி வருகிறது.

குறிப்பாக ஹூபே மாகாணத்தின் தலைநகரான வுஹான் நகரத்திற்கு மட்டும் 1.9 கோடி சுற்றுலாப் பயணிகள் வருகை புரிந்துள்ளனர் என்கிறது அந்த மாகாணத்தின் சுற்றுலா மற்றும் கலாசாரத் துறை.

**உலக நாடுகளின் நிலை என்ன?**

சீனாவின் நிலை இவ்வாறாக இருக்க, உலகநாடுகள் கொவிட் 19இன் இரண்டாவது அலையால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. சொல்லப்போனால் பல பேர் கொரோனாவின் முதல் அலையைவிட இதில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிரான்ஸில் அதன் தலைநகர் பரிஸ் உள்ளிட்ட எட்டு நகரங்களில் ஊரடங்கு விதிக்கப்பட்டுள்ளது. லண்டனிலும் ஏறத்தாழ இதே நிலைதான். இங்கிலாந்தில் பல பகுதிகள் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.


அமெரிக்கா இன்னும் இயல்புநிலைக்குத் திரும்பவே இல்லை. அங்கு மட்டும் 87 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர், 2.25 லட்சத்துக்கும் அதிகமான மக்கள் பலியாகி உள்ளனர்.

சீனாவின் அண்டைய நாடான இந்தியாவில் ஏறத்தாழ 80 லட்சம் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். லத்தீன் அமெரிக்கா நாடுகள், கரீபியன் தீவுகள் என புவியின் எல்லா திசைகளிலும் கொரோனா கால்பதித்து, அழி வைக் கொண்டு வந்திருக்கிறது.

அதே சமயம், ‘வீர நகரம்’ என சீன அதிபர் ஷி ஜின்பிங்கால் அழைக்கப்பட்ட வுஹான் நகரத்தின் நிலை வேறாக உள்ளது. சொல்லப்போனால் கொரோனாவுக்கும் தங்களுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்பது போன்ற தோற்றத்தை இந்த நகரம் கொண்டிருக்கிறது. அரசு தகவல்களும் அப்படியே கூறுகின்றன. இப்போது அங்கு யாருக்கும் கொரோனா இல்லை என்கிறது சீன அரசாங்கத்தின் அதிகாரபூர்வ தகவல். ஆனால், அதனை அவ்வளவு தீவிரமாக எடுத்துக் கொள்ள முடியாது என்கின்றனர் வல்லுநர்கள்.

**வுஹானின் மறுபிறப்பு**

சீனாவின் தேசிய தின கொண்டாட்டம் தொடர்பான காணொலிகளை சமூக ஊடகங்களில் காண முடிகிறது. ஏராளமான மக்கள் திரண்டு சீனாவின் தேசிய கீதத்தை பாடுவதையும், தேசிய கொடியை ஏற்றுவதையும் காண முடிகிறது.



“இந்த காணொலிகளைப் பகிர்ந்து, “வுஹான் நகரம் அதிக வலிமை மற்றும் சக்தியுடன் மறுபிறப்பு எடுத்துள்ளது,” என வெளியுறவுத் துறையைச் சேர்ந்த தகவல் துறையின் துணை இயக்குநர் ‘ருவீட்’ செய்துள்ளார்.

ஹாங்காங்கை சேர்ந்த செய்தியாளர், “ஓரளவுக்கு இது உண்மை. சீனாவின் எல்லா பகுதிகளுக்கும் மக்கள் வழக்கம் போல் பயணிக்கிறார்கள். வுஹானுக்கும் செல்கிறார்கள். அந்த நகரம் இயல்பு நிலைக்குத் திரும்பியது போல தோற்றம் இருந்தாலும், கொரோனாவுக்கு முந்தைய நிலை போல இல்லை என்பதுதான் உண்மை. அங்கு கவலை நிலவுகிறது,” என்கிறார்.

சீனாவில் கொரோனாவால் பாதிக்கப்படுவது தொடர்கிறது. ஆனால், வெளிப்படையாக வுஹானில் இல்லை, என்கிறார் விவியான் ஹூ. வுஹான் சுற்றுலா துறையில் மீண்டு வந்திருப்பது, அதன் தன்னம்பிக்கையைக் காட்டுவதாகவும், பெருந் தொற்றை கையாளும் அதிகாரிகள் மற்றும் அரசின் திறனைக் காட்டுவதாகவும் கூறுகிறார்கள் சில வல்லுநர்கள்.

# முதலும் 100ஆவதும் கோலியின் இலக்கு

## விரட்டல் மன்னனை விரட்டிய பும்ரா

புதுடில்லி, ஒக்.30

ஐ.பி.எல் கிரிக்கெட்டில் மும்பை இந்தியன்ஸ் வீரர் பும்ரா, விராட் கோலியை வீழ்த்தியதன் மூலம் 100 ஆவது இலக்கைப் பதிவு செய்துள்ளார்.

இவர் றோயல் சலஞ்சர்ஸ் பெங்களூர் அணிக்கு எதிராக, விராட் கோலியை வீழ்த்தியது தான் முதல் இலக்காகும். தற்போது 100 ஆவது இலக்காக அதே அணியின் விராட் கோலியை வீழ்த்தி அசத்தியுள்ளார்.

ஐ.பி.எல் கிரிக்கெட்டில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆட்டத்தில் ஆர்.சி.பி அணியை 5 இலக்குகள் வித்தியாசத்தில் வீழ்த்தியது மும்பை இந்தியன்ஸ். முதலில் துடுப்பெடுத்தாடிய ஆர்.சி.பி அணியை 164 ஓட்டங்களில் கட்டுப்படுத்தியது மும்பை இந்தியன்ஸ். இதற்கு முக்கிய காரணமாக பும்ராவின் பந்து வீச்சு. அவர் 4 பந்துப் பரிமாற்றங்களில் 14 ஓட்டங்கள் மட்டுமே விட்டுக் கொடுத்து 3 இலக்குகள் வீழ்த்தினார்.



பும்ரா முதலும் 100 ஆவதும் இலக்கை கோலியை வீழ்த்திப் பதிவு செய்துள்ளார். (ற)



# காலிறுதிக்குள் இந்திய வீரர்

புதுடில்லி, ஒக்.30

அஸ்தானா பகிரங்க ரென்னிஸ் தொடரில் இந்திய வீரர் திவிஜ் சரண், பிரிட்டன் வீரர் லூக் பாம்பிரிட்ஜ் ஜோடி காலிறுதிச் சுற்றில் வெற்றி பெற்றது.

கஜகஸ்தான் நாட்டில் அஸ்தானா பகிரங்க ரென்னிஸ் போட்டித் தொடர் நூர் சுல்தான் நகரில் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்திய வீரர் திவிஜ் சரண், பிரிட்டன் வீரர் லூக் பாம்பிரிட்ஜுடன் இணைந்து விளையாடி வருகிறார். திவிஜ் சரண் ஜோடி நேற்று முன்தினம்நடந்த காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில், ஏரியல் பெகர், கான்சலோ எஸ்கோபர் ஜோடியை எதிர்கொண்டது. சுமார் ஒன்றரை மணி நேரம் வரை விறுவிறுப்பாக நடந்த இந்தப் போட்டியில் திவிஜ் சரண் லூக் பாம்பிரிட்ஜ் ஜோடி 7:5, 4:6, 10:6 என்ற செற் கணக்கில் வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறியது. (ற)

# இந்திய அணியில் சூர்யகுமார் 'அவுட்'

புதுடில்லி, ஒக்.30

ஆஸ்திரேலிய தொடரின் இந்திய அணிக்கு சூர்யகுமார் யாதவ் தெரிவு செய்யப்படாமை அவருக்கு மிகவும் ஏமாற்றத்தை அளித்துள்ளது என்று மும்பை அணியின் பொறுப்புக் கப்டன் பொல்லார்ட் தெரிவித்துள்ளார்.

ஐ.பி.எல் தொடரில் பெங்களூருக்கு எதிரான ஆட்டத்தில் மும்பை அணி வீரர் சூர்யகுமார் யாதவ் 79 ஓட்டங்கள் குவித்து வெற்றிக்கு வித்திட்டுள்ளார். இதுகுறித்து மும்பை அணியின் பொறுப்புக் கப்டன் பொல்லார்ட் தெரிவித்துள்ளதாவது:

தொடக்க ஆட்டத்திலேயே 2 இலக்குகள் வீழ்ந்த பின்னர் ஒருவர் நிலைத்து நின்று ஆடியதை நினைத்துப் பாருங்கள்.

அதுபோன்ற மந்தமான நிலையில் இவர் நிலைத்து நின்று விளையாடி 79 ஓட்டங்களை அணிக்குப் பெற்றுக் கொடுத்து அணியின் வெற்றிக்கு வழிவகுத்தார்.

இந்த நிலையில்சூர்யகுமார்யாதவ்இந்திய அணிக்கு தேர்வு செய்யப்படாமை அவருக்கு மிகவும் ஏமாற்றத்தை அளித்துள்ளது. இந்தப் போட்டித் தொடரில்பும்ராதொடர்ந்து நிலையான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். நாங்கள் மீண்டும் ஓர் அணியாக சிறந்த கிரிக்கெட்டை விளையாடுவோம் -என்றார். (ற)



# விலகினார் லக்ஷயா

புதுடில்லி, ஒக்.30

தந்தைக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதை அடுத்து சர்வதேச பூப்பந்துப் போட்டியிலிருந்து லக்ஷயா சென் விலகியுள்ளார். சார்லோர் லக்ஸ் பகிரங்க பூப்பந்துப் போட்டி ஜேர்மனியில் நடைபெற்று வருகிறது.

இந்தப் போட்டியிலிருந்து நடப்புச் சம்பியனான 19 வயது இந்திய வீரர் லக்ஷயா சென் கடைசி நேரத்தில் போட்டியிலிருந்து விலகியுள்ளார். அவரது தந்தையும், பயிற்சியாளருமான டி.கே. சென்னுக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனையில் கொரோனாத் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது.

இதையடுத்து மற்றைய வீரர்களின் பாதுகாப்புக்கும், போட்டித் தொடருக்கும் அச்சுறுத்தலாக இருக்க வேண்டாம் என்பதாலேயே போட்டியை விட்டு விலகியுள்ளார் என லக்ஷயா சென் தெரிவித்துள்ளார். (ற)

# இந்தியா–ஆஸி. போட்டி அதிகாரபூர்வ அறிவிப்பு

புதுடில்லி, ஒக்.30

இந்திய கிரிக்கெட் அணியின் ஆஸ்திரேலிய தொடரின் திகதி அதிகாரபூர்வமாக நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது. மெல்போர்னில் நடக்கும் டெஸ்ட் போட்டியில் இரசிகர்களை அனுமதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். போட்டி எதிர்வரும் மாதம் 10 ஆம் திகதி முடிவடைந்ததும் இந்தியக் கிரிக்கெட் அணி வீரர்கள் டுபாயில் இருந்து ஆஸ்திரேலியாவுக்கு தனி விமானத்தில் புறப்படவுள்ளனர்.

விராட் கோலி தலைமையிலான இந்திய அணி அங்கு மூன்று ஒரு நாள், மூன்று 20 ஓவர் மற்றும் 4 டெஸ்ட் போட்டிகளில் பங்கேற்கவுள்ளது.

நவம்பர் 12 ஆம் திகதி ஆஸ்திரேலியா சென்றடையும் இந்திய வீரர்கள் சிட்னி நகரில் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்படுவார்கள். அந்த சமயம் அருகிலுள்ள மைதானத்தில் பயிற்சியிலும் ஈடுபடுவார்கள். இந்தப் போட்டிக்கான அதிகாரபூர்வ போட்டி அட்டவணையை ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை நேற்று வெளியிட்டது.

உலகின் மிகப்பெரிய மைதானமான மெல்போர்னில் பாரம்பரியமிக்க 'பாக்சிங் டே' டெஸ்ட் இந்த சீசனில் நடக்குமா? என்பதில் சந்தேகம் நிலவியது. ஏனெனில் அங்கு கடந்த 4 மாதங்களாக கடுமையான கொரோனா ஊரடங்கு நடைமுறை கடைபிடிக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் ஊரடங்கு நேற்று விலக்கிக் கொள்ளப்பட்டது. அதைத் தொடர்ந்து உடனடியாக போட்டி அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. மெல்போர்னில் டெஸ்ட் போட்டி டிசம்பர் 26 முதல் 30 ஆம் திகதி வரை நடப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் 1 லட்சம் பேர் அமரக்கூடிய இந்த மைதானத்தில் தினமும் ஏறக்குறைய 25 ஆயிரம் இரசிகர்களை அனுமதிப்பது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. (ற)



இப்பத்திரிகை, யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அருண் பிறிண்டேர்ஸால் 30.10.2020 ஆம் திகதி வெளியிடப்பெற்றது.